செய்தி வெளியீடு எண்:800 நாள்:28.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான **மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்** ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க **மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2**ஆம் நாளில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டி நடைபெறவுள்ளது.

போட்டித் தலைப்புகள் போட்டி நடைபெறும் நாளன்று அறிவிக்கப்பெறும். போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பரிசுத் தொகையும் , பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும்.

பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் கல்லூரி மாணவர்களை அந்தந்த கல்லூரி முதல்வரே

தெரிவு செய்து போட்டிக்கு அனுப்பப்பெற வேண்டும். அதேபோன்று பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் பள்ளி மாணவர்களை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களே தெரிவு செய்து போட்டிக்கு அனுப்பப்பெற வேண்டும்.

**பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் கல்லூரி மாணவர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும்**

1. முதல் பரிசு ரூ.5000/–
2. இரண்டாம் பரிசு ரூ.3000/–
3. மூன்றாம் பரிசு ரூ. 2000/– என்ற வகையில் வழங்கப்படும்.

மேலும் இப்போட்டியில் பங்கேற்கும் அரசுப் பள்ளி மாணவர்களிலிருந்து மட்டும் இருவர் வீதம் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்புப் பரிசுத் தொகை ரூ.2000/- வீதம் தனியே வழங்கப்பெறும்.

## போட்டி நாள் : 02.10.2021

பள்ளிப்போட்டி நடைபெறும் இடம் நேரம் மு.ப 10.00 மணி

| வட சென்னை | தென் சென்னை | மத்திய சென்னை |
|---|---|---|
| தருமமூர்த்தி ராவ்பகதூர் காலவல கண்ணன் செட்டி இந்து மேல்நிலைப்பள்ளி பெரம்பூர், | ராமகிருஷ்ண மடம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தியாகராய நகர், | குழந்தைகள் தோட்டம் மகளிர் மேல்நிலைப்பள்ளி, மயிலாப்பூர் |

கல்லூரிப்போட்டி நடைபெறும் இடம் நேரம் பி.ப 02.00 மணி

| வட சென்னை | தென் சென்னை | மத்திய சென்னை |
|---|---|---|
| அம்பேத்கர் கலைக் கல்லூரி வியாசர்பாடி, சென்னை | **சென்னை மாநிலக் கல்லூரி**, **சேப்பாக்கம்** **சென்னை** | பாரதி மகளிர் கலைக் கல்லூரி பிராட்வே சென்னை |

மேலும் அரசு அறிவித்துள்ள கொரோனா தீநுண்மி தொடர்பான வழிகாட்டுதல்களை முழுமையாகப் பின்பற்றி போட்டிகள் நடத்தப்பெறும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9